# பெருநகர
# சென்னை மாநகராட்சி

EDP CELL
CORPORATION OF CHENNAI
05 JUN 2017

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 23 இதழ் : 1161 நாள் : 01 – 06 – 2017

## 1. மண்டலம்–14

ம.அ.14.ந.க.எண்.இ2/6880 & 7873 /2017

## குறுகியகால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மூலம் மண்டல அலுவலர் 14 அவர்களால் கோரப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண் பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | முன் வைப்பு தொகை (ரூ.) | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர் பதிவு நிலை | ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | **இ2/6880/2016** மண்டலம்–14, பகுதி–42, வார்டு–169ல் உள்ள புழுதிவாக்கம் பேருந்து நிலையத்தில் நம்ம டாய்லட் (2+1) அமைக்கும் பணி. | 9.29 | 9,300/– | முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் பங்கு பெறலாம் | 09.06.2017 at 3.00 p.m |
| 2. | **இ2/7873/2016** மண்டலம்–14, பகுதி–42, வார்டு–187ல் உள்ள மடிப்பாக்கம் கார்த்திகேயபுரம் ஏரிக்கரை சாலையோரம் நம்ம டாய்லட் (2+1) அமைக்கும் பணி. | 8.43 | 8,500/– | முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் பங்கு பெறலாம் | 09.06.2017 at 3.00 p.m |

1. ஒப்பப்படிவங்கள் https://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் **09.06.2017 அன்று பிற்பகல் 03.00 மணி வரை** பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்ததாரர் Digital Signature Certificate பெற்றிருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரர் **09.06.2017 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு** முன்னதாக இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் ஒப்பங்கள் **09.06.2017 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு** மண்டலம்–14 அலுவலகத்தில் ஒப்பந்ததாரர் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின்அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில் திறக்கப்படும். மேலும், அசல் முன் வைப்புத் தொகை இதர ஆவணங்கள் மண்டல அலுவலகத்தில பெறப்படும்.

3. ஒப்பந்ததாரர் முன்வைப்புத் தொகையினை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் பெற்ற வரைவு காசோலை தனி உறையில் வழங்க வேண்டும்.



மழைநீரை சேகரிப்போம்! நிலத்தடி நீரை பெருக்குவோம்!!

4. ஒப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கும்பொழுது பிணை வைப்புத்தொகைக்கான வங்கி வரைவோலை நகலினை (Scanned Copy) இணைத்து அனுப்ப வேண்டும். பிணை வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் எடுக்கப்பட வேண்டும். வரைவோலை காலம் 90 நாட்களுக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும்.

5. வைப்புத் தொகை அசல் (ஒப்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி வங்கி வரைவோலை வாயிலாகவோ அல்லது வங்கி உத்திரவாதம் வாயிலாகவோ) ஒப்பம் நாளன்று 3.00 மணிக்கு முன்னதாக சம்பந்தப்பட்ட ஒப்பம் கோரும் அலுவலரிடம் நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமான திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும்.

7. நிர்வாக காரணங்கள் ஏதேனும் இருப்பின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யும் உரிமை உரிய அலுவலருக்கு உள்ளது.

**மண்டல அலுவலர் / ம 14**

## 2. மண்டலம் அலுவலர்–5

**ம.அ.5.**ந.க.எண்.**இ1/8205/2017**

### மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் மாவட்ட வருவாய் அலுவலர் (ம) மண்டல அலுவலர்–5 அவர்களால் கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender) ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் **16.06.2017 தேதி பிற்பகல் 3.00 மணிவரை** தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் வருகைதரும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் **அன்றே 3.30 மணியளவில்** கணினி மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது ரத்து செய்யவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு. வேலைப்பற்றிய இதர விவரங்களை அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். வேலைக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **16.06.2017 தேதி பிற்பகல் மாலை 3.00 மணிக்குள்** https://tntenders.gov.in என்ற வலை தளத்திலிருந்து இலவசமாக Digital Signature Card/e.token பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மின் அணு முறையில் கணினி மூலமாக மட்டுமே (e.submission) பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிக்கான ஒப்பப்படிவ தொகை மற்றும் முன்வைப்புத் தொகைக்கான வரைவோலை ஸ்கேன் செய்து ஒப்பந்தப்புள்ளியுடன் கணிணி மூலம் ஏற்றப்படல் வேண்டும். வேலைக்கான ஒப்பப்படிவ விலை தொகைக்கான வரைவோலை மற்றும் முன்வைப்புத் தொகைக்கான வரைவோலை இதர ஆவணங்கள் **16.06.2017 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள்** முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –5 அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். தவறினால் ஒப்பத்தை நிராகரிக்கப்படும்.

எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் 2016–2017ம் ஆண்டின் நிதிட்ட நிதியின் கீழ்

| வ. எண் | கோப்பு எண் பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூ.இலட்சம்) | முன் வைப்புத் தொகை (ரூ.) | ஒப்பந்ததாரர் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| 1. | ம.அ.5.ந.க.எண்.இ1/8205/ MLA-42017 எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் 2016–2017ம் ஆண்டின் திட்ட நிதியின் கீழ் மண்டலம்–5, பகுதி–14, வார்டு–58ல் வெங்கடாச்சலம் தெருவில் புதிய தார்சாலையை அமைக்கும் பணி. | 13.16 | 13,500 | 4 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் ஒப்பந்ததாரர்கள் |

ஒப்பந்ததாரர்கள் தங்கள் DSC டோக்கனை https://tntenders.gov.in என்ற வலை தளத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**மண்டல அலுவலர்–5**

## 3. பொது சுகாதாரத்துறை

**க.து.ந.க.எண்.B2/1084/2017**

### Tender Notice

கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி மாநகர நல அலுவலர்(பொ), பொது சுகாதாரத்துறை அவர்களால் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூ.) | முன்வைப்புத் தொகை (ரூ.) | ஒப்பப்படிவம் விலை (ரூ.) | ஒப்பந்ததாரர் பதிவு நிலை | ஒப்பந்தபடிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி 1–15 மண்டங்களில் பள்ளி சிறுவர்களுக்கு கண்கண்ணாடிகள் சப்ளை செய்தல் (சு.து.ந.க.எண் பி2/1084/2017 | 18,50,000/– | 18,500/– | – | ஒப்பந்தபடிவத்தில் உள்ளபடி | 15.06.2017 மாலை 3.00 மணி |

1. ஒப்பப்படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் வரிசை எண் 1ல் தெரிவித்துள்ள பணிகளுக்கு **15.06.2017 அன்று 15.00 மணி** வரையில், இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்ததாரர் Digital Signature Certificate பெற்றிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் தான் சமர்ப்பிக்க வேண்டும்.